# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1997 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

---

*(1997 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1997, திசெம்பர் மாதம் 26 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி*** II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 5.25** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1997 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. – ஒ 39/97

### 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 1997 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் விரிவுப்பெயர், "1996 சனவரி 1, அத்துடன் 1997 சனவரி 1 என்ற திகதிகளில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1996 சனவரி 1 ஆகிய திகதியிலும் அத்துடன் 1997 சனவரி 1 ஆம் திகதியில் அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வோர் ஆண்டிலும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது – முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "1995 சனவரி 1, 1996 சனவரி 1, 1997 சனவரி 1" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :–

"1995 சனவரி 1, அத்துடன் 1996 சனவரி 1 என்ற திகதிகளிலும் அத்துடன் (இதனகத்துப்பின்னர் "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1997 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும், அக்காலாண்டிற்கான அவ்வாளின் மொத்த விற்பனை வரவின்மீது அல்லது அதன் பாகத்தின் மீது இச்சட்டத்திற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் கணிப்பிடப்பட்ட (இதனகத்துப்பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய பாதுகாப்பு அறவீடொன்றை" ; அத்துடன்

2 – டீ 047236 – 1,150 (97/ 12)

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ஊ) அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தின் பெறுமதி;

(ஊஊ) அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் இரத்தினக் கல்லின் அல்லது ஆபரணத்தின் பெறுமதி ;

(ஊஊஊ) அத்தகைய ஆளினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் இரத்தினக்கல்லின் அல்லது ஆபரணத்தின் விற்பனையிலிருந்தான வருவாய்கள் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு அதன் (எ) என்னும் பந்தியில் "1997 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 1998 சனவரி 1 ஆம் திகதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1997 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டினதும் காலாண்டு ஒவ்வொன்றிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "மத்திய வங்கி" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"இரத்தினக்கல்" என்பது 1993 ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரச் சபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஓர் இரத்தினக் கல் என்று பொருள்படும் என்பதுடன் விழுப்பொன் மற்றும் வெள்ளி என்பவற்றையும் உள்ளடக்கும் ;

(2) "இறக்குமதியாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"ஆபரணம்" என்பது 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஆபரணம் என்று பொருள்படும் ; அத்துடன்

(3) "ஆள்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :–

' "மொத்த விற்பனை வரவு" என்பது இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆளொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது –

(அ) அவர் இறக்குமதியாளர் ஒருவராக இல்லாத விடத்து, மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் அந்த ஆளின் மொத்த விற்பனை வரவு என்று பொருள்படும் ; அத்துடன்

(ஆ) அவர் இறக்குமதியாளராக இருக்குமிடத்து –

(i) சுங்கக்கட்டளைச் சட்டத்திற்கிணங்க சுங்கத்தீர்வையின் நோக்கங்களுக்கு அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் (உண்மையான விலை, காப்புறுதி அத்துடன் கேள்விப் பெறுமதி என்பன வற்றைக் குறிக்கும்) பெறுமதியினதும் ;

(ii) அத்தகைய பொருளின்மீது சுங்கத் தீர்வை எதுவும் செலுத்தப்பட்டிருப் பின் அத்தொகையினதும் ; அத்துடன்

(iii) உட்பந்திகள் (i) மற்றும் (ii) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகைகளைச் சேர்ப்பதன் விளைவாகத் தேறும் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தினதும்,

கூட்டுமொத்தம் எனப் பொருள்படும்.'.

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை அவ்வட்டவணையின் 7 ஆம் விடயத்தில் "1997 சனவரி 1 ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் 1998 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1997 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

கடந்த காலத்தை உள்ளடக்கும் நடைமுறை.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவிற்கு, இச்சட்டத்தின் 5ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 நவெம்பர் 6 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா: (உள்நாட்டு) ரூபா 1,387; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.